விலை: 100/-

ISSN-2613-828X

# யாழ் களரி

yarlgallery@gmail.com

உதயம்: 06 | 10, 11 ஞாயிற்றுக்கிழமை | களரி: 23



## ஈழத் தமிழர்களுடைய பிரச்சனைக்கு நிரந்தர அரசியல் தீர்வு?

## தமிழ் அரசியலும் அநுர குமார திஸாநாயக்காவும்

## அமெரிக்கா ஜனாதிபதியானார் டோனால்ட் டிரம்ப்!!

## ஆசிய சதுரங்க இறுதி போட்டியில் யாழ் மாணவி

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ். பொதுசன நூலகத்தினால் நடத்தப்பட்ட பேரணியில் யாழ். மத்திய கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர்.

நீ உருவாகி பிறரவை உருவாக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊஞ்சல் சின்னம்

X 4

சுயேச்சைக் குழு - 2



கல்விக்காருண்யன் E.S.P. நாகரத்தினம் ஐயா அவர்கள் சமூக நலன் மேம்பாட்டிற்காக கல்வி, விளையாட்டு, கலை-கலாசாரம் என மக்களுக்கு ஆற்றிவரும் பணி அளப்பரியது.

# E.S.P. நாகரத்தினம் கமலரூபன்

சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்

LL.B (Hons), BA (Economics) (University of Colombo)

தந்தை வழியில் தனையனும், மண்ணையும் மக்களையும் நேசிப்பதுடன் அரசியல் மூலம் மக்கள் பணிக்காக, ஆளுமையுள்ள இளைஞனாக, தலைமைத்துவம், முயற்சியாண்மை, கல்வி, விளையாட்டு, கலை-கலாசாரம் என ஐந்து அம்ச அனுபவத்துடன் களத்தில் கமல்.

**களத்தில் கமல்,** தமிழர் பரப்பில் மக்கள் எதிர்பார்க்கும் ஆளுமையுள்ள புதியவர் இவர்... ஆளுமை மிக்கவர்களும், இளைஞர்களும் அரசியலை வெறுப்புடன் பார்க்கும் தருணத்தில் அதில் இருந்து மாறுபட்ட கோணத்தில் நம்பிக்கையுடன் கமலின் அரசியல் பயணம்...

**அரசியல் மூலம் மக்கள் பணி,** தமிழர் பரப்பான சுயத்திலும், புலத்திலும் பலமான அரசியல் கட்டமைப்பை உருவாக்குவதே எமது நோக்கமாகும். கடந்த 15 வருடங்களாக இணக்க அரசியல் என்ற பெயரில் சரணாகதி அரசியலையும், எதிர்ப்பு அரசியல் என்ற பெயரில் வினைத்திறனற்ற செயற்பாட்டையும், சுயநலத்திற்காக பிளவுபட்ட கட்சிகளையும் விடுத்து நேர்மையான வினைத்திறனான அரசியலுக்கு...

**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்,** தமிழர் பரப்பான வடக்கு, கிழக்கினை மையப்படுத்திய தமிழ்த்தேசியமான சுயத்திலும், தமிழ் மக்கள் செறிந்து வாழும் புலங்களான இலங்கையின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த பகுதிகளையும் (உ-ம்: கொழும்பு) உலகெங்கும் பரந்து வாழும் நம் தமிழரை மையப்படுத்த, இங்கிருந்து...

**பாராளுமன்ற தேர்தல் - 2024,** சமூகத்தில் இளம் தொழில் முயற்சியாளராக 2016ஆம் ஆண்டு வணிகத் தொழிலிலும், 2018ஆம் ஆண்டு சட்டத்தரணியாக சட்டத்துறையிலும் கால்பதித்து சுயமாக தொழிற்பட்டு வந்தார். அந்த வேளையில் 2020ஆம் ஆண்டு முதலே மக்களுக்கு அரசியல் தலைமைத்துவம் தேவையுள்ளதை அறிந்திருந்தும், தன்னை பொருளாதார ரீதியாகவும், சமூக மட்டத்தில் அனுபவ ரீதியாகவும், சமூகத்தை நன்கு அறியப்பட வேண்டிய தேவைப்பாடு கருதியும் பொறுமையுடன் அவதானித்து வந்தார். பின்னர் 2023ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாநகரசபை தேர்தலில் களமிறங்கி அறிமுகத்தை ஏற்படுத்திய போதும், 2025ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் இலக்கை நோக்கி பயணித்த வேளையில், 2024ஆம் ஆண்டு எமக்கான நேரம்...

**மாற்றத்திற்கான நம்பிக்கை,** 1948ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு பின்பு தொடர்ந்து வலதுசாரி கொள்கை கொண்ட ஆட்சி காணப்பட்டு தற்போது இடதுசாரி பின்னணியுடைய இலங்கை அரசியல் தளத்தில் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு புதியதோர் மாற்று அரசியலும், மாற்று அரசியல் அணியை உருவாக்கக்கூடிய சிந்தனையாளர்களினதும், செயற்பாட்டாளர்களினதும் தேவைப்பாடு அவசியம். காலங்காலமாக காலாவதியான சுயநல அரசியலை மட்டுமே மேற்கொண்டமையால் தமிழ் மக்கள் அரசியலில் வெறுப்படைந்துள்ள இந்நிலையில் சுயத்தை இழக்காது தமிழர்களது அரசியல் அபிலாசைகளுடன் பொருளாதார வளமேம்பாட்டை நோக்கி...

**சுயேச்சைக்குழு - 2,** வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன், எழுந்தால் பலமான தமிழர் பரப்பு புது விடியலை நோக்கி பயணிக்கட்டும் என தன் காலில் தான் நிற்றலே தமிழர்களுக்கான பேரம் பேசும் ஆற்றலை அதிகரிக்கும். ஓர் சீரமைக்கப்பட்ட தலைமைத்துவ கட்டமைப்பு அற்ற பல தேசிய கட்சிகள் மற்றும் தமிழ்த்தேசிய கட்சிகளின் பற்றாக்குறையே எனது சுயவிருப்பத்துடன் அரசியல் அறவழிப் பிரவேசம்...

**அரசியல் தலைமைத்துவ கட்டமைப்பும், அரசியல் தீர்வும்:** சுதந்திரத்திற்குப் பின்னர் அரசியல் மற்றும் போராட்டங்கள் அறம் சார்ந்தவையாகவும், சுயாதீனமாகவும் ஓர் சீரான தலைமைத்துவ கட்டமைப்புடன் காணப்பட்டது. பேரினவாதம் மற்றும் பிரிவடைகின்ற தமிழ்த்தேசிய கட்சிகளினதும் வினைத்திறனற்ற செயலை மாற்றியமைத்தல். பெண் பிரதிநிதித்துவம், தொகுதி அடிப்படையிலான பிரதிநிதித்துவம் ஆகியவற்றை ஷமுதன்மைப்படுத்திய ஓர் கட்டமைப்பு...

அரசியல் தீர்வு என்ற போர்வையில் இழுத்தடிப்புக்களும், அபிவிருத்தி என்ற போர்வையில் திணிப்பு மற்றும் ஊழல் ஆட்சியே காணப்பட்டது. அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி சரியான நீரோட்டத்தில் இரண்டற பயணிக்க வேண்டும். அதனை மாற்றியமைக்க ஆளுமையுள்ள புதியவர்களை உள்ளடக்கிய மாற்று அணி தேவை...

**முயற்சியாண்மை:** வளமான நிலம், உழைக்கக்கூடிய மக்கள் தமிழர் பரப்பில் உள்ள நிலையில் தேவைப்பாடான மூலதனம் மற்றும் முயற்சியாண்மை கேள்விக்குறியாகவே உள்ளது...

இதற்காக விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் ஆகிய பாரம்பரிய தொழில்களை மேம்படுத்துவதோடு சேவைத்துறைகளை (உ-ம்: சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், கணக்கியல்) மையப்படுத்திய மூலதனம் மற்றும் முயற்சியாண்மைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தல்...

**கல்வி:** ஆரம்பக்கல்வி, பாடசாலை, பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்துவதோடு அவற்றை இடைவிடாது தொழில் சார்ந்து பயணிக்ககூடிய வகையில் தொழிற்கல்வியை வழங்குதல்...

வாழ்வியல் தொடர்பான கல்வி நடவடிக்கைகள், ஆரோக்கிய வாழ்வு (சுகாதாரம்), போக்குவரத்து, பிள்ளைகள் தொடர்பான பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு என பலதரப்பட்ட கல்வி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்...

**விளையாட்டு:** மாணவப்பருவத்துடன் விளையாட்டில் உள்ள தமது ஆர்வத்தை இடைநிறுத்தாது சுய ஒழுக்கத்துடன் ஆரோக்கியமான வாழ்வியல் மற்றும் வணிக ரீதியாக செயற்படக்கூடிய ஓர் கட்டமைப்பை உருவாக்கல்...

கிராமம் முதல் நகரம் வரை விளையாட்டு செயற்பாடுகளை ஊக்குவிக்கும் ஓர் மையத்தினை (உ-ம்: மைதானங்கள்) ஏற்படுத்துவதன் மூலம் சமூக ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்தல்...

**கலை-கலாசாரம்:** எமது கலைச்செயற்பாடுகளை தொடர்ந்து நிகழ்த்துதல், புத்தாக்க செயற்பாடுகள், மீள் உருவாக்கம் என்ற அடிப்படையில் கட்டமைத்து தமிழர் பரப்பின் அடையாளமாக மாற்றியமைத்தல். மேலும் கலைஞர்களுக்கான அங்கீகாரத்தையும் எமது கலைகளையும் சர்வதேச மட்டம் வரை எடுத்துச் செல்லல்...

தமிழர் கலாசாரம் என்பது உலகெங்கிலும் போற்றப்படும் ஓர் விடயம். அதனது சுயாதீனத்தை இழக்காது தமிழர் பரப்பில் காணப்படும் கலாசார விழுமியங்களை பேணிப்பாதுகாத்தல்...

**சுயேச்சை வேட்பாளர்**

பேரினவாதத்திற்கும், தமிழர் பரப்பில் உள்ள கட்சிகளின் பிரிவினைவாதத்திற்கும் எதிராகவே எனது அரசியல் பிரவேசம். அறவழியில் சுயவிருப்பத்துடன் தேர்தல் களத்தில் மேற்கூறப்பட்ட ஐந்து அம்ச ஆளுமையுடைய எனது வருகை மாற்றத்தை நோக்கி, மாற்று சிந்தனையுடன், மாற்று வழியில், மாற்றத்திற்கான நம்பிக்கை...

**"வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன் எழுந்தால் பலமான தமிழர் பரப்பு புதுவிடியலை நோக்கி பயணிக்கட்டும்"**

களத்தில் கமல்

மாற்றத்திற்கான நம்பிக்கை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN-2613-828X

# யாழ் களரி

yarlgallery@gmail.com

உதயம்: 01 | 31.10.2024 வியாழக்கிழமை | களரி: 23

# பாராளுமன்றத் தேர்தலும் தமிழ் மக்கள் முன்னுள்ள தெரிவுகளும்!

**வடக்கு - கிழக்கு தேர்தல் மாவட்டங்களுக்கு முறையே யாழ். - கிளிநொச்சி 6 ஆசனங்கள், வன்னி 6 ஆசனங்கள், திருகோணமலை 4 ஆசனங்கள், மட்டக்களப்பு 5 ஆசனங்கள், அம்பாறை 7 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.**

28 ஆசனங்களுக்கு நூற்றுக் கணக்கான அணிகள் ஆயிரக் கணக்கான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் மாத்திரமே முழுமையான தமிழ் பிரதிநிதித்துவம் பகிரப்படுகின்றது.

ஏனைய தேர்தல் மாவட்டங்களில் முஸ்லிம் மற்றும் சிங்கள பிரதிநிதித்துவம் கணிசமாக காணப்படுகின்றது.

தமிழ் மக்கள் முன்னுள்ள தெரிவுகள் என்ன? யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதில் குளப்ப நிலையே காணப்படுகின்றது.

மன்னார் ஆயர் தேசியத்தை முன்னிலைப்படுத்துவோருக்கு மக்கள் ஆதரவை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்திருந்தார். ஆயினும் இளைஞர்கள் பெண்களுக்கு முக்கியம் கொடுக்கும் தேர்தலாகவே பாராளுமன்றத் தேர்தல் மக்களின் தெரிவாகி இருப்பதையும் அவதானிக்க

பக்.11

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டம்

### ஆதரவு தெரிவித்த அமெரிக்க தூதுவர்



வலிந்து காணாமலாக்கப் பட்ட தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது? என்று அறிவதற் கான உரிமை அவர்களைச் சார்ந்த உறவினர்களுக்கு உள்ளது என்று இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சங் வடமாகாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு மேற்படி தெரிவித் தார்.


அவர் மேலும் தெரிவிக் கையில்,

காணாமல் போன

பக்.11

## கனடா நாட்டில் குடியேறுபவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடிவு

### பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ அதிரடி நடவடிக்கை



கனடாவில் குடியேறுபவர் களின் எண்ணிக்கையை குறைக்க முடிவு செய்துள்ளதாக அந்த நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ அறிவித்துள்ளார்.

வட அமெரிக்க நாடான கனடா சர்வதேச அளவில் வேகமாக வளர்ந்து வரும் நாடாக உள்ளது. வெளிநாடுகளிலிருந்து குடியேறுபவர்களை நம்பித்தான் இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி உள்ளது.

இந்த நிலையில்

பக்.11



## இலங்கை வந்திருக்கும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம்

### வெளிநாட்டு தூதர்களுக்கு வழங்கிய ஜனாதிபதி அநுரகுமார

இலங்கைக்கு வருகை தந்திருக்கும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் இலங்கை பிரஜைகளின் பாதுகாப்புக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உத்தரவாதம் வழங்கினார்.


ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் செண்டில் எட்வின் ஷோக் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று வெள்ளிக்கிழமை முற்பகல்

பக்.11

**நீ உருவாகி பிறவை உருவாக்கு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டம் முடிந்தது ஆனால் இன்னும் போராடியவர்களின் நிலை போராட்டமாகவே உள்ளது





எங்களுக்கான சினிமாவை எமது மக்களுக்கு காண்பிக்கவேண்டும்.
தென்இந்திய யதார்த்த விரோத படங்கள் தொலைக்காட்சித் தொடடர்கள் பாரிய ஒரு சமூக பின்னடைவுக்கு காரணியாகவுள்ளது.
உள்ளூர் கலைர்களின் படைப்புக்ககளை சமூகமட்டத்திற்கு கொண்டுவந்து எம்மவர் படைப்புக்களிற்கு அங்கிகாரத்தை கொடுத்து ஊக்குவித்தல் உள்ளக கலைர்களின் படைப்புகளை உள்ளூார் மக்களுக்கு ஒழுங்கமைந்த முறையில் காண்பித்தல்



யதார்த்த படங்கள் தொடர்பாக ஆரோக்கியமான ரசிகர் கூட்டத்தை அதிகரித்து சமூகவிழிப்புனர்வை கட்டி எழுப்புதல் ஈழத்தில் வெளிவரும் எம்மவர் கதை சார்ந்த படங்கள் வெறும் படமல்ல அது எமது கடந்த காலத்தின் ஆவணப்பதிவுகளாகும்.
அந்த வகையில் ஈழதிரையால் கருத்தாடலுக்கு முதலாவது படமாக விமல்ராஜின் எழில் 22 நிமிட குறும்படம் யுத்தத்தின் வடுக்களை பேசு பொருளாகக்கொண்டு பெண்போராளியைப்பபற்றியும் அதிலும் போரால் அகவீனமாக்கப்பட்டு குடும்பத்தில், சமூக மட்டத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளிற்கு முகம்கொடுத்தல் தொடர்பான குறும்படத்திற்கு 62 பார்வையாளர்கள் 08.09.2024 யாழ்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள ஈழத்திரைக்கு வருகைதந்திருந்தார்கள் அதில் பலர் எழில் குறும்படத்தை பார்வையிட்டு இதயங்களை ஈரமாக்கிஉணர்வு பூர்வமாக ககலந்துரையாடினர் இலகுபடுத்துனராக மாஹிர் மற்றும் விமல்ராச் கருத்தாடலை ஆரம்பித்து வைத்ததனர் அதில் சில கருத்துக்கள்
போராட்டம் முடிந்தது ஆனால் இன்னும் போராடியவர்களின்நிலை போராட்டமாகவே உள்ள்ளது.
சமூக யதார்தத்தை சிறப்பாக வெளிப்படுத்திய படம் எனக்கு கண்ணீர் வருமளவுக்கு உணர்வுபூர்வமாக பார்கமுடிந்தது.
ஈழத்தமிழர்களுக்காக போராடியவர் களுடன் நாங்கள் ஏப்படிநடந்து கொள்கின்றோம் போராளிகளை மீண்டும் சமூகத்தில் ஒருங்கினைப் பதற்கு ஏற்ற உணர்வை ஏற்படுத்தி யிருந்தது.
படத்தை பார்த்த சிலர் தங்கள் கிராமத்தில் பாடசாலையில் காட்சிப்படுத்தி கருத்தாடல் செய்ய ஆர்வமாக உள்ளதை தெரிவித்தனர்
பாடசாலை மாணவர்கள் சிலர் தாங்களும் குறும்படங்களை இயக்க விரும்புவதாகவும் நடிப்பிலும் ஆர்வமுள்ளதாகவும் தெரிவித்தனர்.
ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜேர்மன் பெடரல் வெளிவிவகார அலுவலகம் இணைந்து நிதியளிக்கும் இலங்கையில் சமூக ஒற்றுமை மற்றும் சமாதானத்தை வலுப்படுத்துதல் திட்டத்துடன் (SCOPE) இணைந்து இந்நிகழ்வு இலங்கை பலசமய கருத்தாடல் நிலைய சகவாழ்வுச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ் SCOPE திட்டம் GIZ நிறுவனத்தினால் நீதி அமைச்சுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.




ஈழத்திரையின் தொடர் செயல் திட்டமாக இத்தகைய குறும்படங்களை காட்சிப்படுத்தல் கருத்தாடல் செய்தல் எம்மவர் படைப்புகளை கொண்டாடுதல்




ஈழத்தில் வெளியாகும் தனித்துவமான படைப்புக்களை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்லுதல் போன்ற ஆக்கபூர்வமான திட்டங்களுடன் இணைந்து செயற்பட விரும்புவோர் மற்றும் நல்ல படைப்புக்களை வைத்திருக்கும் கலைஞர்கள் 0776510375 எனும் வட்சப் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் "நாம் உருவாகுவோம் நம்மவர்களையும் உருவாக்குவோம்"

**ஜோ.ஜெஸ்ரின்**
**ஈழத்திரை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் களரி
E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/ Viber : 077 651 0375

## அடுத்த காலடியை எடுத்து வைக்கின்றோம்

மாற்றம் என்பது இன்றைய பேசு பொருள் மட்டுமல்ல கற்பனைக்கு எட்டாத வகையில் நல்ல சகுனங்கள் ஏற்படுவது போன்ற தோற்றம் காணப்படுகின்றது.

கடந்த கால அனுபவங்களின் படி பல்வேறு மாற்றங்களை சந்தித்து வந்தபோதும் பெரும்பாலும் ஏமாற்றங்களே வரலாறாகியுள்ளது.

ஆயினும், தளராத நம்பிக்கையுடன் நிலை மாற்றத்தின் கருவிகளாக நாமே நம்மை ஆறுதல் படுத்திக் கொண்டு அடுத்தவர்களையும் நேசிக்கும் "நீ உருவாகி பிறரை உருவாக்கும் பயணத்தில்" காலத்தின்தேவை கருதி மீளவும் இன்னுமொரு காலடியை எடுத்து வைக்க துணிகின்றோம்.

தேசிய ரீதியிலும் உலக அரங்கிலும் மாற்றத்தை நோக்கிய பல்வேறு பணிகள் வேர்களைப் போலவே வெளித் தெரியாமல் செய்து வருகின்றோம்!

இலங்கையின் 25 மாவட்டங்களிலும் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம், பௌத்த இளையோர்களை அணிதிரட்டி எமது நாட்டிற்கு முன்னேற்ற கரமான அறுவடைக்காக எம்மால் முடிந்ததைச் செய்திருக்கிறோம்.

"இலங்கை பல்சமய கருத்தாடல் நிலைய சகவாழ்ச் சங்கம்" எனும் இயக்கத்தின் ஊடாக சமாதானம், நல்லிணக்கத்திற்கான முயற்சிகளை முன்னெடுத்தே வருகின்றோம்.

தென்னிலங்கை இளையோர் புலம்பெயர் இளையோர் யாவருடனும் யாழ்ப்பாணத்தை தலைமையகமாகக் கொண்டு அனைத்து மக்களையும் ஒருங்கிணைக்கும் பாலமாக எமது பயணம் தொடர்கின்றது.

முரண்பாடுகள் உள்ள இடங்களில் கருத்தாடல்கள் மூலம் சமாதான முறையில் இன ஒற்றுமைக்காக மக்களின் நலன் ஒன்றிற்காகவே தொடர்ந்தும் பயணிக்க ஆர்வப்படுகின்றோம்.

எமது நாட்டில் சமயங்களுக்கிடையில், இனங்களுக கிடையில் அரசியல் கட்சி பேதங்களுக்கிடையில் பிரிவுகள், பிளவுகள், முரண்கள் இருக்கின்றன. அவற்றை முற்றாகக் களைய முடியாது. பல்வகைத் தன்மையுடன் எதிர்கொள்ள முடியும்.

நடுநிலையுடன் யாவரையும் சிந்திக்கவும் செயற்படவும் நல்ல நோக்கத்திற்கு துணைபுரிய முடியும்.

இசை, பாட்டு, வீதி நாடகங்கள், ஒளிப்படக் காட்சிகள், திரைப்படக் காட்சிகள் போன்ற கலை வடிவங்கள் ஊடாகப் பல்வேறு துறைகள் மூலம் ஒரே பணிக்காக எம்மை அர்ப்பணித்து செயலாற்றுவது போலவே 2018 இல் யாழ். களரி மாதப்பத்திரிகையின் 22 இதழ்களை வெளியிட்டு மக்களின் பேராதரவைப் பெற்றுக் கொண்டோம். தொடர்ந்தும் எழுந்து நடக்க முயற்சிக்கின்றது இந்தக் குழந்தை.

தட்டி விழுத்துவோர், கிள்ளி எறிவோர் மத்தியில்தான் இந்த பாலகன் பயணிக்கப் போகின்றான்.

ஏந்தியவர்களே ஏணியை எடுத்து விடலாம் போற்றுவார் போற்றட்டும் புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றட்டும் எமது மனதில் எமது மக்களின் முன்னேற்றத்திற்கான பல்வேறு திட்டங்கள் தரிசனமாகியுள்ளன. அவை யாவற்றையும் வெளிப்படுத்தும் களமாகவும் கருவியாகவும் யாழ் களரி எதிர்காலத்தில் நிதர்சனமாகும்.

எம் மக்களிற்கு உண்மை எது என்பதை உரத்த குரலில் சொல்ல அநீதிகளை வெல்ல உங்கள் கரங்களில் யாழ் களரி.

அன்பர்களே! நண்பர்களே! ஆதரவாளர்களே தொடர்ந்தும் உங்கள் ஆதரவையும் ஆலோசனைகளையும் தாருங்கள்.

"ஏசுவார்கள், எரிப்பார்கள் ஆயினும் உள்ளதை உள்ளபடி எழுதுவோம்" "உண்மையை உரக்கச் சொல்வோம்" என்ற எமது மூத்த ஊடகவியலாளர்களின் பாதக கமலங்களில் நாம் எடுத்துவைக்கும் அடுத்த காலடியை சமர்ப்பிக்கின்றோம்.

# பண்டைக் கால யாழ்ப்பாணம்

– வி.கந்தவனம் –



**1. பெயர்**

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பண்டைப் பெயர் நாகதீவம் ஆகும். நாகர் வாழ்ந்த நாடாக அக்காலத்தில் யாழ்ப்பாணம் விளங்கியதால் இப்பெயர் இயல்பாகவே எழலாயிற்று. மகாவம்சத்தில் முதலாம் அதிகாரத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு நாகதீவ என்னும் பெயரால் குறிக்கப்பட்டுள்ளது. புத்தர் புகழ் போற்றும் தமிழ்க் காவிய மாம் மாணிமேகலை குறித்துச் செல்லும் நாகநாடும் யாழ்ப்பாணமேயாம். சேர். போல் பீரிஸ் என்பார் மகா வம்சம் உணர்த்தும் குறிப்புக்களாலும் வல்லிபுரம், கந்தரோடை முதலிய இடங்களிற் கண்டெடுக்கப்பட்ட புதை பொருட்களாலும் யாழ்ப்பாணத்தின் ஆதிப் பெயர் நாகதீவம் என்பதனை நன்கு தெளிவாக்கிவிட்டனர்.

நாகதீவம் மூன்று பிரிவுகளாக அமைந்திருந்தது. மேற்குப் பகுதி மணிபல்லவம், மணிநாகதீவம், மணிபுரம் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டது. மத்திய பகுதி சிங்களத்தில் வலிகம என்றுந் தமிழில் அப்பொருளையே கொண்ட மணலூர், மணற்றி, மணற்புரம் என்றும் வழங்கப்பட்டது. பதினான்காம் நூற்றாண்டில் எழுந்த செகராசசேகரம் என்னும் நூலில் இப்பகுதி மணவை என்று குறிக்கப்பட்டிருக்கின்றது. கிழக்குப் பகுதி எருமைத்தீவு என்றும் எருமைமுல்லைத்தீவு என்றும் பெயர் பெற்றிருந்தது.

நாகதீவம் யாழ்ப்பாணமாக மாறிய வரலாறு திட்டவட்டமாகத் தெரிய வில்லை. எனினும் கைலாய மாலை, யாழ்ப்பாண வைபவ மாலை ஆகிய நூல்களில் யாழ்பாடி ஒருவர் இந்நிலப் பரப்பை, அன்றி இதன் ஒரு பகுதியைப் பரிசாகப் பெற்றதனால் யாழ்ப்பாணம் என்ற பெயர் வரலாயிற்று என்று குறிக்கப்பட்டுள்ள கதையையும் வரலாற்று ஆசிரியர்கள் முற்றாகத் தவிர்க்கவொருப்பட்டாரில்லை. இக் கதைக்குச் சான்றாக இருப்பவை ஒரு சில பாடல்களே. சம்பவம் நடந்த இடமும் காலமும் குளறுபடியாகவுள்ளன. கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஈழநாடு முழுவதையும் ஆண்ட சோழ நாட்டு இளவரசன் ஏலேலசிங்கன் என்பானிடம் தொண்டை நாட்டிலிருந்து வந்த அந்தகக்கவி வீரராகவனென்னும் யாழ்பாடி குடாநாடு முழுவதையும் பரிசாகப்பெற்றுத் தன்னரசு நிலைநாட்டியமையின் அது பிற்றைநாளில் யாழ்ப்பாணம் என வழங்கலாயிற்று என்ற மயில்வாகனப் புலவர் கூற்றை முது தமிழ்ப் புலவர் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் ஆதரிக்கின்றனர். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் நாகதீபத்தையாண்ட செயதுங்கன் என்பான் பரிசில் பெறவந்தோர் யாழ்பாடிக்கு (அவர் அந்தநகரல்லர்) நாகதீபத்தின் ஒரு பகுதியைப் பரிசாகக் கொடுத்தானென்றும் அப்பகுதியில் யாழ்ப்பாணன் தன் சுற்றத்தாருடன் குடியேறியதனால் அது யாழ்ப்பாணம் ஆயிற்றென்றும் அப்பெயர் பின்னாளில் குடாநாடு முழுவதற்குமுரித்தாய் விட்டதென்றும் முதலியார் செ.இராசநநாயகம் அவர்கள் கருதுவர்.


இவற்றுடன், சோழர் காலத்தில் ஈழநாடு முழுவதுவும் நாற்பத்தொன்பது கோட்டங்களாகப் பிரித்து ஆளப்பட்டதென்றும் அவற்றுள் வடபாலில் 'ஏழ்பனை' என்ற பனைமிகுந்த கோட்டமொன்றிருந்ததென்றும் 'ஏழ்பனை' 'யாழ்பனை' யாகத் திரிந்து பின்னாளில் யாழ்ப்பாணம் ஆயிற்றென்றுங் கூறும் தமிழ்நாட்டு அறிஞர் ஒருவரின் ஆராய்ச்சியும் நோக்கற்பலாது.

**2. குடி**

யாழ்ப்பாணத்தின் தொல்குடிகள் நாகர் எனப்படுவர். இதற்குப் பல சான்றுகள் உள. இவ்வினத்தார் வாழ்ந்தமை குறித்தே நாகதீவம், நாகநாடு என்னும் பெயர்கள் யாழ்ப்பாணத்துக்கு வரலாயிற்று என்பதனை முன்னர்க் கண்டோம். நாகர் இப்பகுதியில் மட்டுமன்றி இலங்கையின் பிற பகுதிகளிலும் இந்தியா, பேமா நாடுகளின் சில பகுதிகளிலும் அக்காலத்தில் வாழ்ந்து ஆட்சி செலுத்தினர். இலங்கையின் மேற்கிலுள்ள கல்யாணி அல்லது களனியாவில் நாகர் வாழ்ந்தமைபற்றி மகாவம்சம் கூறுகின்றது.

(தொடரும்)

**காட்டூன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களுடைய பிரச்சனைக்கு நிரந்தர அரசியல் தீர்வு வேண்டும்

**வேலன் சுவாமிகள்**

**“மக்களுக்கு ஏதாவது நான் செய்ய வேணும் என்ற உணர்வு இருப்பவர்களை தெரிவு செய்ய வேண்டும்.”**



**“பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை” P2P மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் தலைமை ஒருங்கிணைப் பாளரும் சிவகுரு ஆதீன முதல்வருமாகிய வேலன் சுவாமிகளுடனான நேர்காணல்.**

கேள்வி : சுவாமிகளுக்கு வணக்கம். உங்கள் சுக நலன்கள் பணிகள் பற்றி கூறுங்கள்?

பதில் : வணக்கம், ஜெஸ்ரின் யாழ் களரி பத்திரிகை ஊடாக உங்களை மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி. அடியேனுடைய சுக நலன்கள் இறை அருளால் எல்லாம் சுகமாக இருக்கின்றேன். ஆன்மீக பணிகள், அரசியல் பணிகள், சமூகப் பணிகள் யாவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அனைத்துத் தளங்களிலும் அறம் சார்ந்த பணிகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம். தற்போதிருக்கும் சவாலான சூழ்நிலையில் ஆத்ம பலத்துடன் மனோதிடத்தோடு தடைகளை எல்லாம் கடந்து பணிகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

கேள்வி : பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் பேர் எழிற்சிக்குப் பலர் உரிமை கோரியதைக் காணமுடிந்தது. தலைமை ஒருங்கிணைப்பாளர் என்ற வகையில், உங்கள் எதிர்கால திட்டங்கள் என்ன?

மாபெரும் மக்கள் எழிற்சிப் போராட்டம் 2021ஆம் ஆண்டு சிறிலங்காவினுடைய சுதந்திர தினத்தை எதிர்த்து சுதந்திரதினம் ஈழத்தமிழர்களுக்கு கரிநாள் என்ற அடிப்படையிலே நடாத்தப்பட்டது. 2021 பெப்ரவரி 3ம் திகதி தொடக்கம் 7ம் திகதிவரை 5 நாட்கள் தொடர்ச்சியாக பொத்துவிலிலிருந்து ஆரம்பித்து பொலிகண்டிவரை நடாத்தப்பட்ட அந்த மக்கள் எழிற்சிப் போராட்டம் என்பது வடக்கு - கிழக்கு சிவில் சமூக அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. போராட்டத்தினுடைய ஏற்பாட்டாளர் என்பது வடக்கு - கிழக்கில் உள்ள சிவில் சமூகங்கள் எந்தெந்த அமைப்புக்கள் போராட்டத்திற்குப் பங்களிப்பை வழங்கினார்கள் என்ற பட்டியலை நாங்கள் வெளியிட்டிருந்தோம். அந்த போராட்டத்திற்கு ஆணிவேர் என்பது, தமிழ் மக்கள்தான்! அதேநேரம் தமிழ் தரப்பிலுள்ள அரசியல் கட்சிகளின் ஆதரவையும் பெற்றுத்தான் செய்தோம். இதில், புலம்பெயர் உறவுகள் உட்பட சகலரையும் ஒன்றிணைத்துதான் செய்தோம்.

**“மொழியாற்றல் மூன்று மொழியும் தெரிந்து கொண்டு பாராளுமன்றத்தில் பேசுபவர்கள் மக்களுக்கு ஒண்டும் செய்யவில்லை எல்லாம் டீல் பேசுகிற ஆக்களாத் தான் இருக்கினம்.”**

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு. சுமந்திரன் அவர்கள், சாணக்கியன் அவர்கள் தாங்கள்தான் ஆரம்பித்தது என்பது மிகவும் அப்பட்டமான பச்சையான பொய். அவர்கள் போராட்டங்களில் பங்குபற்றினார்கள் என்பதை நாங்கள் மறுக்கவில்லை. எங்களுடைய போராட்டத்தை தாங்கள்தான் நடத்துவதாக காட்டுவதற்காக பெரும் குழப்பங்களைச் செய்தார்கள். எங்களுடைய ஒழுங்கமைப்பை மீறி அவர்கள் செயற்பட்டார்கள். ஒவ்வொரு கட்டங்களிலும் எமது சிவில் சமூகங்களின் வழி நடத்தலை சுயநலம் மிக்க அரசியல் தரப்புக்கள் மீறி நடக்கின்ற ஒரு துர்ப்பாக்கிய சூழல்தான் 2009க்கு பிறகு எமது மண்ணிலே நடைபெற்று வருகின்றது.

அண்மைக்காலத்திலும் முகப்புத்தகங்களூடாகவும் தவறான பிரச்சாரம் செய்யப்படுகின்றது. முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் புதைக்கும் செயல் சில விடயங்களை ஆன்மீக நெறியில் நாங்கள் நேராக கூறாமல் விடுவதால் பொய்கள் பரவ காரணமாகிறது. ஆதலினால் பெயர் சொல்லி குறிப்பிடுவது கூட என்னுடைய பார்வையில் அறம்தான்.

வேலன் சுவாமிகள் உட்பட தனி நபர்கள் யாருமே அந்த போராட்டத்தை உரிமை கோர முடியாது. ஒட்டுமொத்த மக்களுடைய எழிற்சியாக வடக்கு கிழக்கு சிவில் சமூகங்கள் தான் ஏற்பாடு செய்திருந்தது. வெளிநாட்டு தூதரகங்கள் கேட்கிறார்கள், நோக்குகிறார்கள் உண்மையில் இந்தப் போராட்டத்தை சிவில் சமூகங்களா அரசியல் வாதிகளா முன்னெடுக்கின்றார்கள் என்று. அரசியல் சுயலாபங்களுக்காக செய்வதாக கிழக்கிலுள்ள பிள்ளையான் போன்றவர்கள் பிரச்சாரம் செய்யத் தொடங்கினார்கள். பெத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் பேரெழுச்சி இயக்கத்தை அங்குரார்ப்பணம் செய்துள்ளோம். மக்கள் இயக்கமாக, அரசியல் இயக்கமாக தேசிய இயக்கமாக இளைஞர்கள் அணி திரண்டார்கள்.

வடக்கில் அங்கஜனும் கிழக்கில் பிள்ளையானும் அபிவிருத்தியை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதான கருத்துக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்குது அனைத்து மக்களிற்குள்ளும் தமிழ் தேசிய உணர்வு விடுதலைக்கான உணர்வு இருந்தது எடுத்துக்காட்டுவதாக இருந்தது P2P பலமான மக்கள் இயக்கமாகி முழுமையாக உருவாகவிடாமல் எதிரான சக்திகள் பலமாகவுள்ளது.

கேள்வி : எதிர்காலத்திட்டம்?

பதில் : மக்கள் சந்திப்புக்களை வடக்கு கிழக்கு தாயகம் எங்கும் தமிழ்த் தேசியம் எண்டால் என்ன இது போன்ற அரசியல் விழிப்புணர்வுகளை முன்னெடுக்கவுள்ளோம். நாடாளுமன்ற தேர்தல் முடிந்ததும் பணிகள் தொடரும் அரசியல் சாராது தேர்தல் அரசியலாக இது இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி: தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் உங்கள் பெயரும் இருந்தது அதில் என்ன நடந்தது?**

பொது வேட்பாளர் ஊடாக எமது அபிலாசைகளை வெளிப்படுத்த அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து கடந்த காலத்தில் செயற்படுத்த முடியவில்லை. இந்த முறை தேர்தல்தான் விக்னேஸ்வரன் ஐயாவுடைய தமிழ் மக்கள் கூட்டணி, ஐந்து இயக்கங்கள் இணைந்த ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி இரண்டு தரப்பும் வெளிப்படையாக ஆதரவு தெரிவித்திருந்தவர்கள். தமிழரசுக் கட்சியோ, தமிழ் தேசிய மக்கள் முன்னணியோ ஆதரவு தெரிவிக்கவில்லை. பின்னர் தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாசவுக்கும், மக்கள் முன்னணி தேர்தலை புறக்கணிப்பதாக நிலைப்பாட்டை எடுத்தார்கள்.

தமிழர்களின் தேசிய பிரச்சனைதான் தலையாய பிரச்சனையாகவுள்ளது. தொழில் வாய்ப்பு பிரச்சனை, போதைப் பொருள் பிரச்சனை, பண்பாட்டு பிரச்சனை, சமூகச் சீரழிவுகள் வடகிழக்கில் இருந்தும் எல்லாப்பிரச்சனைக்கும் தலையாய பிரச்சனையாக எங்களுக்கென்று ஒரு அதிகாரமில்லாத பிரச்சனை எங்களை நாங்களே ஆளக்கூடிய அதிகாரம் எமக்கு கிடைக்குமாக இருந்தால் போதும் எல்லா பிரச்சனைகளும் தீர்ந்துபோகும்.

ஈழத்தமிழர்களுடைய பிரச்சனைக்கு நிரந்தர அரசியல் தீர்வு வேண்டும். தமிழர்கள் எந்த இனத்துக்கோ எந்த மொழிக்கோ எதிரானவர்களில்லை. ஒட்டுமொத்த உலகையும் அறம் சார்ந்து வழிநடத்தும் திறன் தமிழர்களுக்கு உண்டு. ஈழத்தமிழர்களும் அதற்கு விதிவிலக்கு அல்ல. 1948 சுதந்திரம் பெற்றபின் அடக்கி ஒடுக்கப்பட்டு பிரச்சனைகள் வட்டுக்கோட்டை தீர்மானம் வருகுது ஆயுத இயக்கம் உருவாகுது ஆயுதப் போராட்டம் முடிந்தது. இம்முறை ஜே.வி.பிக்கு வாக்களித்தால் ஈழத்தமிழர்கள் சார்ந்து அவர்கள் எதுவும் செய்யப் போவதில்லை. ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு சமஷ்டி என்பது இல்லவே இல்லை. காணியும் இல்ல பொலிசுமில்லை 13ம் இல்லை 13க்குள்ளேயே ஒண்டும் இல்ல. அந்த ஒண்டுமே இல்லாத 13ஐ கூட தரமாட்டம் என்கிறார்கள். ஜெனிவாவில மனித உரிமையையும் நிறைவேற்றமாட்டம் என்று தீர்மானம் அறிவித்திருக்கினம் ஜே.வி.பிக்கோ தென்னிலங்கை சார்ந்த சிங்கள கட்சிகாரருக்கே தமிழ் மக்கள் வாக்களிக்கக் கூடாது தமிழ் தேசியம் சார்ந்து நிக்கிற கட்சிகளுக்குத்தான் வாக்களிக்க வேண்டும்.

> **“ தமிழ் தேசித்தை நேசிக்கின்றவர் எந்தக் கட்சியோ சுயேட்சை குழுவோ அவரை இனம் கண்டு வாக்களிக்க வேண்டும். ”**

அரசாங்கத்தோடு சேர்ந்து நிற்கிற கட்சிகளுக்கு வாக்களிக்க கூடாது. டக்ளஸ், அங்கஜன், பிள்ளையான், வியாழேந்திரன் போன்றோருக்கு வாக்களிக்க முடியாது தமிழ் தேசியத்துக்குள்ளயும் சுமந்திரன், சாணக்கியன் போன்றோர் நீக்கப்படவேண்டும்.

ஜெனிவாவில போய் இனப்படுகொலை நடைபெறவில்லை என்று சொல்லிப் போட்டு வந்திருக்கினம். இன அழிப்பு நடந்தது என்பது உண்மை. கூட்டமைப்பை உடைத்து தமிழரசுக் கட்சி இன்றைக்கு நீதிமன்றத்தில நிக்குது. குறிப்பிட்ட கட்சியை கூட தமிழ் தேசியம் சார்ந்தது என்று கைகாட்ட முடியாத சூழல்தான் இருக்கு. மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் தமிழ் தேசியத்தின்படி நடப்பவர்களுக்கு வாக்களிக்க வேண்டும்.

'பார் பெமிற் வருமானத்துக்கு செய்தவர்களை ஏற்றுக்கொள்ள முடியாது அர்பணிப்போடு சுயநலமில்லாமல் தமிழ் தேசியத்தை நேசிக்கும் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை கொண்ட கொள்கை வசதிகளையும் கடும் கொள்கையில்லாதவர்களையும் தெரிவு செய்தால் நல்லது. புதிய முகங்களை தெரிவு செய்வது நல்லது.

**கேள்வி : யாழ் களரி வாசகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

யாழ்களரியின் கருத்துக்களை வாசித்து மக்கள் தமது கருத்துக்களை யாழ் களரிக்கு எழுதவேண்டும். மேற்படி பத்திரிகையை ஒவ்வொருவருக்கும் அறிமுகப்படுத்துவது மக்களுடைய கடமையாக இருக்கவேண்டும். குறிப்பாக உங்களுடைய தேர்தல் மாவட்டத்திலே அதில் தமிழ் தேசியம் சார்ந்த தரப்பில் நல்லவர்கள் வல்லவர்கள் என்ற அடிப்படையில் ஒருவரைத் தெரிவு செய்யுங்கள். நல்ல ஒரு மாற்றத்தை ஏற்படுத்துங்கள். யாழ் களரி பத்திரிகை தமிழ் தேசியம் சார்ந்து தொடர்ந்தும் பணியாற்றவேண்டும். ●

---

# நல்லது நடக்க வேண்டும் யார் மணி கட்டுவது?

## கேட்டியளே சங்கதி



என்ன சோமண்ணே நாட்டில நடக்கிறத பாக்க எல்லாம் குளப்பமா இருக்கு போல...

முகம் தெரியாத முகங்களெல்லாம் வந்து முகவரி தெரியாமல் அலையுதுகள் பாரன் சோமண்ணை என்றார் செல்வராசா வாத்தி. எல்லாம் தேர்தல் வந்ததால தற்காலிகமாக வந்து தங்கட பாட்டுக்கு கதை அளக்கினம். இவையள அடுத்த மாதம் காணாமல்போன சங்கத்திலதான் பெயர் இருக்கும் போல... என முத்தரும் இணைந்து கொள்ள ஆலமரத்தடியில பலரும் இணையத் தொடங்கினம்.

நிண்ட வெள்ளத்தை வந்த வெள்ளம் அள்ளிப் போனது போலத்தான் புதுசுபுதுசாபுது கலர்ரோட்டப் போட்டியில கலந்து கொள்ள வந்திருக்கினம் முத்தர் மனம் புளுங்க குரல் கொடுத்தார்.

இவையள் ஒருக்கா நம்ம நாட்ட சுத்தப்படுத்த ஒரு வீதி ஒழுங்கையளில சுத்தப்படுத்த சிரமதானம் செய்ய வரட்டும் அவயளயும் கண்டு கொண்டதா இருக்கும் டெங்கு நுளம்பு வராம சுத்தப்படுத்தினதாகவும் இருக்கும் எல்லோ,

ஒருசிலர் காரியாலயம் தற்காலிகமாக அமைக்க இடம் தேடினம். உரிமை எண்டும் இனம் எண்டும் புதுக்கதை விடுகினம். செலவிலா தொழில்தேட இதுவும் ஒரு வழிதான்பாரு எண்ட முத்தரின் கருத்துக்கு.

வயலில் நல்ல காவல் காரன் இல்லாட்டி கட்டாகாலிகள் எல்லாம் வந்து பிரிச்சு மேயிறது வழமைதானே எதுக்கும் எங்கட தோட்டத்தை நாமதான் காப்பாற்ற வேணும் இல்ல எண்டா உடையவன் இல்லாட்டி தோட்டம் துரவுகளில பாதீனம்தான் பெருகும் பாரு என்ற சோமரின் குரலுக்கு.

ஏன் இப்படியே சொல்லி காலத்தை கரைக்காம எங்களுக்கு நல் வாழிகாட்டுற சமய, சமூக தலைவர்கள் ஒருக்கா கூடி கதைச்சா நல்லதுதானே.

நல்ல விஷயம்தான் என்ற முருகன் குரலுக்கு இதுக்கு யாரு மணி கட்டுறது முன்னின்று உழைக்க ஒரு சிலர் முயன்றால் நடக்காதது ஒன்றுமில்லை என அழுத்தி சொன்னார் சோமண்ண. நல்ல காவல் காரன் இல்லாட்டி கட்டாக்காலிகள் தான் தோட்டத்தை மேயும்.

48 குழுக்களும் வேட்பாளர்களும் 14ம் திகதியோடு செத்த நாயிலிருந்து உண்ணி களண்டது போல களண்டு போயிடுவினம். முன்நிலையில் இருக்கிறவையள் முண்டி அடித்து நாடாளுமன்ற கதிரையள நிரப்பி அதில மிஞ்சுறது 20 பேர்தானே இவையள் என்ன மன நிலையோட தங்கட பகையை அந்த அரங்கிலயும் நிண்டு கத்தி தொலைப்பினமா? அல்லது உருப்படியா ஏதும் கதைப்பினமா சொல்லுங்க என இருந்தவர்களுக்கும் தலையாட்டும் எங்கட தலைமை யாளுக்கும் உறைக்க சொன்னார் முத்தண்ணை.

முத்தண்ண சொன்ன உருப்படிகள் றெயினில ஏறினா கூட தனித்தனி பெட்டிக்க இருந்து புறங்கிறாம். நடந்து முடிந்தது போக நடக்க வேண்டியதை கூட்டாக கலந்து பேச ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினால் என்ன? அது எப்படி? என்றார் சோமண்ணை.

நல்ல விடயம்தான் இதுக்கு பல்கலை மாணவர்கள், பொது நலன்விரும்பிகள் முன்னின்று வட கிழக்கு ஆயர்கள், இந்து, இஸ்லாம் மத தலைவர் ஒன்றுகூடி தெரிவான பிரதிநிதிகளை அழைத்து முரண்களை கழைந்து தங்கள் கொள்கைகளை மனம் திறந்து பொதுக்கருத்துகளை முரண்படாமல் நாடாளுமன்றத்தில் கருத்தை முன்வைக்கும் முதிர்ச்சிக்கான வழிகாட்டல் கருத்தமர்வை தேர்தல் முடிந்த ஓர் இரு தினங்களுக்கு முன் எடுத்தால் எம் இனத்துக்கான விடிவை நோக்கி பயணிக்கலாம் தானே என செல்வராசா வித்தி கூற அத்தனையும் சரி தான் இதனை எம்மக்களும் ஆமோதிப்பார்கள். அதனை முன்னெடுக்க பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முன்நின்று சர்வமத தலைவர்களை கலந்துரையாடி தெரிவான உறுப்பினர்களுக்கு நல் ஆலோசனை நடாத்த முன்வந்தால் நல்லது நடக்கும்; இன்றே தொடரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல் சமயம்

## கணபதியின் அமைப்பு



இறைவன் ஒருவனே. அவனே பஞ்சபூதியங்களுமாய் இப்பேருலகைத் தாங்குபவன் என இந்து சமயம் விளக்கி உள்ளதும் அறிவோம்.

'தானே இருநிலம் தாங்கி விண்ணாய் நிற்கும்
தானே சுடும் அங்கி திங்களும் ஞாயிறும்
தானே மழை பொழி தையலு மாய்நிற்கும்
தானே தடவரை தன்கடல் ஆகும்."

என்னும் திருமந்திரம் 1141-ம் பாடலும் கவனிக்கத்தக்கதேயாம். இறைவனுடன் ஐக்கியப்படுவதே மக்களின் பெரு நோக்கமாகும். எனவே மக்களுக்கு இறைவழிபாடு மிகமிக முக்கியமானதாகும்.

இந்து சமயத்தின் எத்தெய்வ வழிபாட்டிற்கும் முதலில் கணபதி தெய்வம் வழிபட அமைந்தமையினாலும், கணபதி தெய்வ வழிபாடு ஏனைய தெய்வ வழிபாட்டிலும் பார்க்க வேறு விதமான உபாசனைகளைக் கொண்டுள்ளமையினாலும், கணபதி தெய்வம் கண்டத்திற்கு மேல் யானை ரூபமும் கண்டத்திற்குக் கீழ் மானிடரூபமாக அமைந்தமையினாலும் இதற்கும் யாதும் காரணம் இருக்கவே செய்யும்.


கணபதி தெய்வத்தின் சிரசில் துதிக்கை, செவிகள் தந்தங்கள் ஆகிய மூன்று பாகங்களுமே யானையின் ரூபத்தைக் குறிக்கின்றன. ஆகவே இம்மூன்று பாகங்களின் அருமை பெருமைகளை நாம் நன்கு விளங்கிக் கொள்வதும் அவசியமேயாம். கணபதி தெய்வம் பிராணாயாமத்தைப் புலப்படுத்த அமைந்தமையினால் மேற்படி உறுப்புக்கள் மூன்றும் பிராணாயாமத்திற்கு அனுகூலமானவை என்பதும் சரியேயாம்.

பிரணவம் என்பதை ஓம் என்பர். ஓம் என்பதைப் பிரணவமென்பர். பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் என்பதும் நாம் அறிந்ததேயாம். சகல தெய் வங்களுக்கும் தாங்கள் சோடி சோடியாக அமைந்திருக்கக் கணபதி தெய்வத்திற்கு மட்டும் ஒற்றைப்பட்ட இலக்கம் கொண்ட ஐந்து கரங்கள் அமைந்ததற்கும் ஓர் காரணம் இருக்கவே செய்யும் இப்பேற்பட்ட ஐந்தா வது கரத்தைப் பிரணவத்தின் விளக்கத்தின் போது 'ஐங்கரன்" எனச் சுட்டிக்காட்ட மன்வந்தமையினால் பிரணவத்தின் போக்கிற்குக் கணபதியின் ஐந்தாவது கரமாகிய தும்பிக்கையின் போக்கு அதி முக்கியமானதாக அமைவதும் நியாயமேயாம்.

(தொடரும்)

## இயேசுவே கர்த்தர்

### கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்



(பிலிப் 4:4)

இருள் சூழ்ந்த நேரம் வானத்தில் பெரிதான பாதிப்பு ஏற்பட்டது போல் இடி முழங்கிற்று. ஜனங்கள் சிலர் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள். மேலும் சிலர் அழுது கொண்டும்பலர்தகாதவார்த்தைகள்பேசி அதிர்ச்சியடைந்தவர்களாக அவதிப்பட்டார்கள். ஏன் இந்த அவதி! ஏன் தான் இந்த இருள்!

ஆம் "ஆறாம்மணி நேரம்முதல் ஒன்பதாம்மணி நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. (மத் 27:45) அப்பொழுது தான் அந்தச் சத்தம்! "என் தேவனே" என் தேவனே!.. மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். (மத் 27:46) "மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஆவியை விட்டார்." (மத் 27:50)

கண்ணீரும் கவலையும் நிறைந்த உலகம் இது! இந்த உலகத்தில் எப்படி சந்தோஷமாயிருப்பது? நாளுக்கு நாள் வருகிற போராட்டங்கள் பிரச்சனைகள் கொஞ்சமல்ல. என்ன தான் செய்ய? எல்லாம் ஒரு கேள்விக்குறிதான். மனுஷனாகப் பிறந்த எவராக இருந்தாலும் வருகிற பிரச்சனைகள் மத்தியிலே சந்தோஷமாக இருக்கவே விரும்புகிறார்கள். ஆனால் அவர்களால் முடியாத நிலையாகவே உள்ளது.

வேதம் சொல்கிறது. எப்போதும் சந்தோஷமாயிருங்கள் என்று. சாதாரணமாக எமக்கு சந்தோஷத்தை தரும் வழிகளை நாமே தெரிந்து கொண்டு வாழ ஏற்பாடுகளை செய்கிறோம். உலகத்திலே எத்தனையோ வழிகளை உருவாக்குகிறோம். ஒருமுறை ஒரு புகையிரத நிலையத்தில் இரண்டு பேர் தங்களுடைய மனதிலே பாதிப்புக்கள் ஏற்பட்ட நிலையில் போதைப் பொருளை உட்கொண்டு சந்தோஷம் காண முயற்சித்தார்கள். போதை அதிகமாகையால் ஒருவர் தட்டுதடுமாறி வந்து கொண்டிருந்த புகையிரத வண்டியின் முன் விழுந்தார். புகையிரதம் அவரின் மேலாகச் சென்றது. அவருடைய தசைகளும் இரத்தமும் அருகில் நின்றவர் மீதுபட்டது. அவருடைய போதை போய்விட்டது. இப்போது பைத்தியமான நிலை உருவாகிவிட்டது.


எப்போதும் சந்தோஷமாயிருப்பது எப்படி? எங்கே போவேன்.

நாம் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றால் ஓர் மேன்மையானவருக்குள் தான் இருக்க முடியும்.

(தொடரும்)

இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையச் சகவாழ்வுச் சங்கம்
ශ්‍රී ලංකා බහු-ආගමික සංවාද සහජීවන සංගමය
Co-Existence Society Sri Lanka Multi-Religious Dialogues Centre
Regd. No. Exi/Co/Jaff.14/344
28/1, A.V.Road, Colombuthurai, Jaffna, Sri Lanka
Tel: 0762 963 944 / 0776 510 375

## நன்மையை நாடுபவன் சொர்க்கத்தின் வழி செல்வான்



எல்லாம் வல்ல அல்லாஹ்வின் படைப்பான மனிதனுக்கு எ ஈருலக வாழ்க்கை உள்ளது. ஒன்று இந்த உலகில் அவன் வாழும் வாழ்க்கை. அடுத்தது, இந்த உலக வாழ்க்கையில் அவன் எவ்வாறு நடந்து கொள்கின்றான், எத்தகைய நற்செயல்களை செய்கின்றான் என்பதற்கு ஏற்ப அவனுக்கு கிடைக்கும் மறுஉலக வாழ்க்கை.

சொர்க்கம், நரகம் என்று இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது மறுஉலக வாழ்க்கை. இறைவன் காட்டிய வழியில் வாழ்ந்து இறைவனை வணங்கி, நற்காரியங்களையும், நற்செயல்களையும் செய்து வரும் அடியார்களுக்கு அல்லாஹ் வழங்கும் பரிசுதான் சொர்க்கம். இறைவனுக்கு மாறு செய்து, அவன் கூறியவழியில் நடக்காமல் அநீதியாக இருப்பவர்களுக்கு காத்திருப்பது தான் நரகம்.

நன்மைகளையும், நற்செயல்களையும் ஒருவர் நாடினால் அவ ரது வாழ்க்கைப்பயணம் சொர்க்கத்தை நோக்கி அமையும். "எவர் இறை நம்பிக்கை கொண்டு, நற்செயல் புரிகின்றாரோ அவருக்கு நற்கூலி இருக்கின்றது. மேலும் நாம் அவருக்கு எளிதான கட்ட ளைகளையே வழங்குவோம்" என்பது அல்லாஹ்வின் உறுதி மொழியாகும். (திருக்குர்ஆன் 18:88)

இறைவன் வகுத்த வழியில் திருக்குர்ஆனை ஓதி, தொழு கையை கடைப்பிடித்து, ஜகாத் கொடுத்து நன்மைகளையும் நற்காரியங்களையும் யார் செய்து வருகிறாரோ அவர் சொர்க்கத் தில் இடம்பெற தனக்கான நன்மைகளை முன்கூட்டியே அனுப்பி வைக்கிறார். அப்படிப்பட்டவர் செய்யும் செயல்கள் எல்லாவற்றை யும் அல்லாஹ் 65வனித்துக்கொண்டு இருக்கின்றான்.


இதையே திரு க்குர்ஆன் (2:110) இவ்வாறு குறிப்பிடுகின்றது: "இன்னும் தொழுகையை முறையாகக் கடைப்பிடித்தும் ஜகாத் கொடுத்தும் வாருங்கள் ஏனெனில் உங்களுக்காக எந்த நன் மையை முன்பே அனுப்பி வைக்கின்றீர்களோ, அதை அல்லாஹ் விடம் பெற்றுக்கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் உற்று நோக்கியவனாகவே இருக்கிறான்".

அதுமட்டுமல்ல ஒரு இறையடியான் நன்மையைச் செய்ய நினைத்தாலே அதற் கு நற்கூலியை அல்லாஹ் பதிவு செய்கின் றான். அடுத்து அந்த நன்மையை அவன் செய்துவிட்டால் ஒன்றுக்கு பல மடங்கு நற்கூலியை அவனுக்கு அல்லாஹ் வழங்குகின்றான். இதை பின்வரும் நபிமொழி மூலம் அறியலாம்.

(தொடரும்)

## உண்மையைத் தேடி

### அரசகுமாரன் பிறந்தான்



ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்கள் முன்பு நடந்த கதை. இந்தியாவில், இமயமலைச் சாரலிலே, ஒரு நகரம் இருந்தது - கபிலவஸ்து. இந்த நகரம் சாக்கிய அரசர்களின் தலைநகரமாக விளங்கியது. சுத்தோதனர் என்ற அரசர் இதனை ஆண்டு வந்தார். அவருடைய பட்டத்தரசியின் பெயர் மகாமாயை.

ஒரு நாள் மகாமாயை ஒரு விந்தையான கனவு கண்டாள். ஒரு வெள்ளை யானை தும்பிக்கையில் தாமரை மலரை எடுத்துக் கொண்டு வந்ததாம். பிறகு அவளுடைய கருப்பையில் புகுந்து விட்டதாம். இப்படி அரசி கனவு கண்டாள்.

பண்டிதர்கள் இந்தக் கனவின் பொருளை உரைத்தனர். அரசி ஒரு அழகான மகனைப் பெற்றெடுப்பாள் என்று அவர்கள் சொன்னார்கள்.

பேறுகாலம் நெருங்கியது. அரசி மகாமாயை தன் பிறந்த வீட்டுக்குச் செல்லப் புறப்பட்டாள். வழியில் லும்பினி என்ற வனம் வந்தது. அங்கு நெடிய சாலமரங்கள் அடர்ந்த அழகிய சோலை இருந்தது. இந்தச் சோலையில் மகாமாயை ஒரு அழகிய மகனைப் பெற்றெடுத்தாள். குழந்தைக்கு சித்தார்த்தன் என்று பெயரிட்டனர்.

மகாராணி கபிலவஸ்து நகருக்குத் திரும்பினாள். நகரெங்கும் ஒரே குதூகலம்.

சில நாட்களில் அங்கே ஒரு துறவி வந்தார். குழந்தையைக் கண்டு, 'இவன் மகானாக விளங்குவான்' என்று கூறினார்.

இப்படிக் கூறியபின் அவர் வருத்தமுற்றார். அவ ருடைய கண்களில் கண்ணீர் நிரம்பியது. அரசர் அவருடைய வருத்தத்திற்கான காரணத்தைக் கேட்டார். இதற்கு துறவி, 'இந்தச் சிறுவன் உலகில் அறிவொளியைப் பரப்புவான். எனக்கு வயதாகி விட்டது. அந்தப் பொன்னாளைக் காண நான் உயிருடன் இருக்க மாட்டேன். இதை நினைத்து வருந்தினேன்," என்றார்.

குழந்தை பிறந்த ஏழு நாட்களிலேயே மகாமாயை இறந்து விட்டாள். அரசியின் தங்கை பிரஜாபதி கௌதமி குழந்தையை அன்புடன் வளர்த்தாள். ஆகவே, சித்தார்த்தனுக்கு கௌதமன் என்ற பெயரும் வழங்கலாயிற்று.


சுத்தோதன மன்னர் பல தேசங்களிலிருந்து பெரிய பண்டிதர்களை வரவழைத்தார். அவர்களிடம் அரச குமார னின் வருங்காலத்தைப் பற்றிக் கேட்டார். அரசகுமாரன் உலகுக்கு வழிகாட்டும் மகானாக விளங்குவான் என்பது திண்ணம். அரச போகங்களைத் துறந்து அவன் யோகியாக மாறாவிட்டால் பெயரும் புகழும் பெற்ற மாமன்னராகத் திகழ்வான் என்று எல்லாரும் கருத்துத் தெரிவித்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் களரி

## தரப்பட்ட படத்தை நிறம் தீட்டி அனுப்புங்கள்







அனுப்ப வேண்டிய முகவரி: சிறுவர் பகுதி, பொதுசன நூலகம், யாழ்ப்பாணம்.

# பனை மரம்



உலகத்தில் எத்தனையோ வகையான மரங்கள் வளர்கின்றன.

அவற்றில் மக்களுக்கு மிகவும் பயன்படக்கூடியதும், நல்ல வருமானத்தைத் தரக்கூடியதுமான மரங்கள் பல உண்டு. தேக்குமரம் நன்றாக முற்றிய பின் அதை வெட்டி அதன் பலகையைப் பல வகைக்குப் பயன் படுத்துகிறோம். பல மரங்கள் நமக்குப் பலகையாக மட்டும் பயன்படுகின்றன. மற்றும் அதன் கட்டைகளும் பயன்படுகின்றன. சந்தனமரம் நல்ல நறுமணத்தைத் தருவதோடு, மருந்துகளாகவும் பயன்படுகின்றது. ரப்பர் மரம் அதன் பாலைக் கொடுத்து நமக்குப் பயன்படும் அத்தியாவசியமான பல பொருள்களைத் தயாரிக்க உதவுகிறது. இதனால் நல்ல வருமானமும் உண்டு. இன்னும் மாமரம், புளிய மரம், வேப்ப மரம், பலா மரம், தென்னை மரம் இன்னும் எத்தனையோ வகையான மரங்கள் நமக்குப் பலவகையில் பயன்படுவதோடு, சில ஆகார வகைக்கும் உபயோகப்படுகின்றன.

இந்த வகையில் முக்கியமாகத் தென்னை மரமும், பனை மரமும் மிகவும் பயன்தரக்கூடியதாக இருந்து வருகின்றன.

பனை மரம் ஓங்கி வளரும் தன்மையது. பனை மரம் சுமார் 50 அடிக்குமேல் 100 அடி உயரம் உயர்ந்து வளரும்.

உஷ்ணப் பிரதேசத்தில்தான் பனைமரம் நன்றாக வளரும். பனை மரத்திற்குப் பாதுகாப்புத் தேவையில்லை.

பனை மரம் கண்ட இடங்களில் மானாவாரியாக வளர்ந்திடும்.

சில இடங்களில் ஒத்தை ஒத்தையாகவும் சில இடங்களில் தோப்பு போலக் கூட்டம் கூட்டமாகவும் வளர்ந்திருக்கும்.

பனை மரம் பல பிரதேசங்களில் வளர்ந்தாலும் இந்தியாவின் கிழக்குப் பகுதிகளில் தான் ஏராளமாக வளர்ந்திருக்கின்றன. இதர பகுதிகளில் பனை மரம் இருந்தாலும் இந்த அளவிற்கு குறைவு என்று தான் சொல்ல வேண்டும்.

நமது தமிழ் நாட்டை மட்டும் எடுத்துக் கொண்டால் தென் பகுதியில் ஏராளமான பனை மரங்கள் வளர்ந்திருக்கின்றன.

நமது தமிழ் நாட்டின் மொத்தப் பரப்பளவு 49,962 சதுர மைல்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டில் மட்டும் சுமார் 5,000,0000 (ஐந்து கோடி) பனை மரங்கள் இருப்பதாகக் கணக் கெடுத்திருக்கின்றனர்.

இவைகள் சுமார் 46,796 ஏக்கர் நிலங்களில் பரந்து வளர்ந்திருக்கின்றன.

பனை மரம் தென்னை மரத்தைப் போன்று உயர்ந்து வளரக் கூடியது.

ஆனால், பனை மரத்தின் உச்சி, தென்னை மரத்தில் இருப்பது போன்று, நெருங்கி அகன்ற பல மட்டைகளுடன் இருக்காது.

பனை மரத்தின் ஓலை நீண்டு இராமல் குறுகலாக இருக்கும். அதோடு ஓலையும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து ஒட்டிக்கொண்டு, யானையின் காது போல விரிந்து பல முனைகளுடன் தோன்றும்.

இதிலிருந்து ஒரு காம்பு நீண்டு மரத்தின் பக்கம் வந்து, நடுவில் பிளந்து, இரு மட்டைகளாகப் பிரிந்து, மரத்தின் இரு பக்கங்களில் பற்றியிருக்கும். இந்த ஓலை, மட்டையுடன் கூடிச் சுமார் 5 முதல் 6 அடி வரை நீண்டிருக்கும். சில மரங்களில் இது அளவில் குறைந்தும் இருப்பது உண்டு.

ஓலையின் அகலம் சுமார் 4 அடி முதல் 5 அடி வரை இருக்கும். பனை மரத்தின் ஓலை விசிறியைப் போல இருக்கும். இந்த ஓலை நல்ல பச்சை நிறமானதாயிருக்கும். மட்டை சற்று மஞ்சளும் பழுப்புமாக இருக்கும்.


பனை மரம் மாதத்திற்கு ஒரு மடல் வீதம் விடும். ஒரு மரத்தில் சுமார் 15 மடல் முதல் 20 மடல் வரை இருக்கும். சில பனை மரங்களைத் தூரத்திலிருந்து பார்த்தால், ஒரு உயரமான கம்பத்தின்மேல் ஒரு பெரிய பந்தை வைத்தது போல உருண்டையாகத் தோன்றும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசனும் முயலும்

**1** உழவன் ஒருவனிடம் பெரிய தோட்டம் ஒன்று இருந்தது. அதில் காய்கறிகளை பயிரிட்டான் அவன். நாள்தோறும் ஒரு முயல் அந்தத் தோட்டத்திற்குள் நுழைந்து பயிர்கள் அனைத்தையும் தின்று வந்தது. அதைப் பிடிக்க அவன் பல முயற்சிகள் செய்தான். முயல் அவனிடம் சிக்கவே இல்லை.



**2** எப்படியும் முயலைப் பிடித்தே ஆக வேண்டும் என்று நினைத்த அவன் அரசனிடம் சென்றான். “அரசே என் தோட்டத்தை முயல் ஒன்று பாழாக்கு கிறது. நீங்கள்தான் எனக்கு உதவி செய்ய வேண்டும்” என்றான். சிரித்த அரசன் “ஒரு முயலைப் பிடிக்க உன்னால் முடியவில்லையா?”

“நாளைக்கே வேட்டை நாய்களுடன் நான் அங்கு வருகிறேன். இந்த முயலின் அட்டகாசத்தை அடக்குகின்றேன். அந்த முயலைப் பிடித்த பிறகுதான் நான் அங்கிருந்து திரும்புவேன்” என்றான் அரசன்.



**3** மகிழ்ச்சியுடன் திரும்பி தன் தோட்டத்திற்கு வந்தான் உழவன். இனி முயலின் தொல்லை இருக்காது என்று நினைத்து அரசனுக்கும் அவன் வீரர்களுக்கும் சிறப்பான விருந்திற்கு ஏற்பாடு செய்தான். மறுநாள் படை வீரர்கள், வேட்டைக்காரர்கள், நாய்கள் சூழ அரசன் தோட்டத்திற்கு வந்தான்.



**4** எல்லோரையும் வரவேற்ற உழவன் அவர்களுக்குச் சிறப்பாக விருந்து வைத்தான். விருந்து சிறப்பாக முடிந்தது. மகிழ்ச்சி அடைந்த அரசன், “இன்னும் சிறிது நேரத்தில் அந்த முயல் என்ன கதி ஆகப் போகிறது பார்” என்று வேட்டையாடப் புறப்பட்டான்.



**5** வேட்டைக்காரர்கள் கொம்புகளை ஊதினார்கள். வேட்டை நாய்கள் பயங்கரமாகக் குரைத்துக் கொண்டே தோட்டத்திற்குள் பாய்ந்தன. புதரில் மறைந்திருந்த முயல் அச்சத்துடன் வெளியே வந்தது. அங்கிருந்த வேலியை நோக்கி வேகமாக ஓடியது.



**6** அதைப் பார்த்த அரசன், “அந்த முயலைத் தப்ப விடாதீர்கள், பிடியுங்கள்” என்று கத்தியபடி வேலிப் பக்கம் ஓடினார். வேட்டைக்காரர்களும் வீரர்களும் அரசனைத் தொடர்ந்து ஓடினார்கள்.



**7** தப்பிக்க நினைத்த முயல் தோட்டத்திற்குள் அங்கும் இங்கும் ஓடியது. அவர்கள் அனைவரும் அதைத் துரத்தினார்கள். நீண்ட நேரப் போராட்டத்திற்குப் பின் ஒரு வேட்டை நாய் பாய்ந்து வந்து, அந்த முயலைக் கவ்விப்பிடித்தது. வெற்றிப் பெருமிதத்துடன் அந்த முயலை உழவரிடம் காட்டினான் அரசன். இவர்களின் முயல் பிடிக்கும் முயற்சியில் தன் அழகான தோட்டம் முற்றிலும் நாசமாகி விட்டதை எண்ணி வருந்தினான் உழவன்.



**8** “சிறு வேலைக்குப் பெரியவர்கள் உதவி கேட்பது தவறு என்று உணராமல் போனேனே. என் அழகான தோட்டம் இப்படி அழிந்துவிட்டதே. ஒரு முயல் என்ன? ஆயிரம் முயல்கள் பல நாட்கள் என் தோட்டத்திற்கு வந்திருந்தாலும் இப்படிப்பட்ட அழிவை ஏற்படுத்தி இருக்க முடியாதே. என் முட்டாள் தனத்தால் பேரழிவை நானே தேடிக் கொண்டேன்” என்று தன் தவறை எண்ணி வருந்தினான் உழவன்.



மாணவர் மன்றம்

## நீதி - சிந்தித்து செயற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வலிந்து காணாமல்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)
குடும்பங்களின் கதைகள் வலி மிகுந்தவை. அதையிட்டு தான் துயருறுவதாகவும் மன்னார் உறவுகளிற்கு தெரிவித்துள்ளார்.

### பாதுகாப்புக்கு...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற போதே ஜனாதிபதி அநுர குமார இந்த உத்தரவாதத்தை வழங்கினார்.

தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் செண்டில் எட்வின் ஷோக் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்து அவரின் வெற்றிக்கு தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோசாவின் வாழ்த்துச் செய்தியை கையளித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடினார்.

இலங்கையின் தற்போதைய பாதுகாப்பு குறித்து இதன் போது விசேட கவனம் செலுத்தப்பட்டதோடு, இலங்கைக்கு வந்திருக்கும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பிரஜைகளின் பாதுகாப்பு ஏற்கனவே உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். இதேவேளை இந்நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளினதும் இந்நாட்டு மகக்ளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நியூசிலாந்து உயர்ஸ்தானிகர், பொது மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்காக நாட்டுக்குள் வலுவான மற்றும் பலன் மிக்க பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்குவதாகவும் ஜனாதிபதியிடம் உறுதியளித்தார்.

தற்போதைய சுற்றுலா பரிந்துரைகளை காலோசிதமானதாக மாற்றுவது குறித்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா, பிரதான சுற்றுலா வலயங்களுக்குள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகவும் தெரிவித்தார். இதேநேரம் தெற்காசியாவில் செயற்படுத்தப்படும் சமாதான மற்றும் தேசிய மறுசீரமைப்பு செயற்பாடுகளை இலங்கையிலும் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குவதாக தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் செண்டில் எட்வின் ஷோக் உறுதியளித்தார்.

இலங்கை வணிக சபையுடன் இணைந்து சர்வதேச வர்த்தகத்தை வலுப்படுத்துதல் தொடர்பில் ஒத்துழைப்புடன் செயல்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதுடன், இலங்கையின் பாதுகாப்பு, தொழில்நுட்கம், விவசாயம் மற்றும் சுற்றுலா உள்ளிட்ட துறைகளின் மேம்பாட்டிற்கும் தென்னாபிரிக்கா ஒத்துழைப்பு வழங்குமென உயர்ஸ்தானிகர் செண்டில் எட்வின் ஷோக் உறுதியளித்தார்.

தென்னாபிரிக்காவின் பிரதி உயர்ஸ்தானிகர் ரெனே எவர்ஸன் வர்ணே மற்றும் தூதரகத்தின் இரண்டாம் செயலாளர் ஷெனதெம்பா லெயிலா ஷெங்கெலா உள்ளிட்டவர்களும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

# அமெ. ஜனாதிபதியானார் டோனால்ட் டிரம்ப்





அமெரிக்காவில் இருந்து ஒருவர் போன் பண்ணி ஒரே அழுகை. ட்ரம்ப் ஜெயித்ததற்காக. அமெரிக்கச் செய்தி சேனல்களும் ஏறக்குறைய ஒரே மாதிரி ஒப்பாரி வைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. அவர் எப்படி ஜெயித்தார் என்றே தெரியவில்லை என்று அந்த நண்பர் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார். எனக்கு பெரிய ஆச்சரியம் ஒன்றும் இல்லை. போன தடவையே அமெரிக்க தேர்தல் சிஸ்டத்தில் இருக்கும் ஒரு குழப்பத்தில்தான் அவர் தோற்றார்.

கமலா ஹாரிஸ் இவ்வளவு கடினமான போட்டி கொடுத்ததே கூட வியப்புதான். பைடன் அமெரிக்காவுக்கும் நல்லது செய்யவில்லை. உலகத்துக்கும் நல்லது செய்யவில்லை. அவர் ஆட்சிக் காலத்தில் இரண்டு போர்கள் தொடங்கப்பட்டு இன்னும் போய்க் கொண்டிருக்கின்றது. நல்லதோ கெட்டதோ டிரம்ப் காலத்தில் எந்தப் போரும் தொடங்கப்படவில்லை. மேலும் ஒருவரைப் பற்றிய மிகக் கடுமையான எதிர்மறை பிரச்சாரம் ஒரு கட்டத்திற்குப் பிறகு அவரைப் பற்றிய விளம்பரமாக மாறிவிடுகிறது என்பது என்னுடைய கருத்து. ட்ரம்ப் மிகப்பெரிய உளறுவாயர்.

ஆனால் அமெரிக்காவின் பைபிள் பெல்ட் அவரை சமகால "தீர்க்கதரிசியாக" பார்க்கிறது! அவரிடம் பழைய ஏற்பாட்டு பைபிள் கேரக்டர்கள் போன்ற ஒரு சாயல் இருக்கிறது. அவர் வேறு அவ்வப்போது பைபிளை தூக்கி தூக்கிக் காட்டிக் கொண்டிருக்கிறார். இன்றைய பேச்சிலும் "கடவுள் என்னை எதற்காக உயிரோடு வைத்திருக்கிறார் "..என்றால் என்று ஏதோ சொல்லியிருக்கிறார். அமெரிக்கா வெள்ளை கிறிஸ்தவர்களின் நாடு என்பதை அவர் ரொம்ப நேரடியாகவே தன்னுடைய பேச்சுகளில் சொல்லி வந்திருக்கிறார்.

பைடன் தனிப்பட்ட கெட்ட பழக்கங்கள் எதுவும் பெரிதாக இல்லாதவர். ஆனால் போரிங் ஆன ஆசாமி.

ட்ரம்ப் கிரிமினல். ஆனால் சுவாரசியமானவர். மக்களிடம் உணர்ச்சியை எழுப்பக் கூடியவர்.

ஜி கே செஸ்டர்டனின் ஒரு மேற்கோள் இருக்கிறது.

"The criminal is always the creative artist. The detective only the critic."

ஆயிரம் குணக்கேடுகள் இருந்தாலும் மானுட மனம் டிரம்பை செயல்படுகிறவராகவும் பைடன் கமலஹாரிஸ், போன்றவர்களை குறை சொல்லிக் கொண்டே இருப்பவர்களாகவும்தான் பார்க்கும்.

# ஆசிய சதுரங்க இறுதி போட்டியில் பங்கேற்கும் யாழ் மாணவி

ஆசிய சதுரங்க இறுதி போட்டியில் கலந்து கொள்வதற்காக வடமாகாணத்தை சேர்ந்த மாணவி தாய்லாந்திற்கு பயணமாகவுள்ளார். கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலையில் தரம் இரண்டில் கல்விபயிலும் கயிசனா தர்சன் இலங்கை அணியின் சார்பில் ஆசிய சதுரங்க இறுதி போட்டியில் டிசம்பர் மாதம் தாய்லாந்து பயணமாகவுள்ளார். குறித்த மாணவிக்கு யாழ்களரியின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.



# மக்கள் பிரதிநிதிகளை மத தலைமைகள் வழிகாட்டுமா?

வடகிழக்கில் தேர்தல் முடிந்த பின் தெரிவான உறுப்பினர்கள் நாடாளுமன்றம் செல்வோரே சற்று சிந்தியுங்கள்!

வட கிழக்கு வழிகாட்டும் சர்வமதத் தலைவர்களே வட கிழக்கு வழிகாட்டும் சர்வ மதத்தலைவர்களே உங்கள் பங்களிப்புடன் தெரிவானவர்களை அழைத்து உட்பகைகளை மறந்து மக்கள் சேவைக்காக தெரிவான வர்களை ஒரே சந்திப்பு மூலம் எங்கள் முரண்களை காவிச்செல்லும் தெரிவாளர்களாக இராது எமது மக்கள் தேவைகளை இனம் கண்டு ஒரே குரலாக எமது தேவைகளை வெளிப்படுத்தும் ஒன்றுபட்ட குரலாக மன்றில் குரல் கொடுக்க மதத்தலைமைகளே வழிகாட்டுவீர்களா?

யார் செய்வது என்று காத்திராது இன்றே சிந்தியுங்கள் சமயத்தலைமைகள் முயன்றால் முடியாத தொன்றல்ல யார் மணி கட்டுவது என்றிராது வட கிழக்கு ஆயர்மன்றும், இந்து - முஸ்லீம் மதத்தலைமைகளும், ஆன்மீக ஆசீருடன் நல்வழிகாட்டவேண்டியதும் காலத்தின் கடமைதானே.

### பாராளுமன்றத்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)
முடிகிறது. தேசியம் என்ற பெயரில் வாரிசு அரசியல் நடத்துவோர் அல்லது காலம் காலமாக பாராளுமன்றம் சென்று வருவோர் ஒரு வேளை நிராகரிக்கப்படுவதற்கான மக்கள் மனங்களில் விரக்தி நிலையும் உள்ளது. மாற்றம் நிகழத்தான் போகிறது. மக்கள் தீர்ப்பை எழுதும் கடப்பாட்டுடன் பாராளுமன்ற தேர்தல் களம் விரிந்துள்ளது.

### கனடா நாட்டில்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)
இனிவரும் காலங்களில் வெளிநாடுகளிலிருந்து கனடாவில் குடியேறும் மக்களின் எண்ணிக்கையை குறைக்கப்போவதாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

# யாருக்கு புலமைப் பரீட்சை?

புலமைப் பரீட்சை யாருக்காக ஆரம்பிக்கப்பட்டது? யாரின் கைகளில் பலப் பரீட்சை நடாத்துகிறது?

பின்தங்கிய, வறிய மாணவர்கள் முன்னேற்றத்துக்காக ஆரம்பித்து வெல்பவர்கள் நகரப் பாடசாலையில் சிறு அரச உதவியுடன் முன்னேற ஆரம்பிக்கப்பட்டதே ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை.

இன்று நகரப் பாடசாலைகள் தமது பெருமைகளை வெளிப்படுத்தவும், ரீயூசன் நிலையங்கள் வருவாய்க்காகவும் புத்தி ஜீவிகளின் வருவாய் பெருக்கும் பெருமை சேர் நிலையமாகவும் மாறி உள்ளது; ஊடகங்களும் துணைபோகிறது...

இதனைத் திட்டமிடும் கல்வி அமைச்சும் ஆரம்பிக்கப்பட்ட நோக்கை மாற்றி போட்டி கௌரவ பரீட்சையாக்கியது ஏன்?

வறிய மாணவர்கள், பின்தங்கிய மாணவர்கள் முன்னேறவும் அரச உதவியினைப் பெறவும் தடையாய் இருப்பதை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பார்களா? வசதி படைத்தோர் அரச ஊழியர்கள் பிள்ளைகளுக்கு உதவியோ நகர பாடசாலை வசதியோ கிடைக்காமல் பின்தள்ளப்படும் மாணவர்களுக்கு மாற்று வழி உண்டா? முடியுமானால் பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்களின் கேள்வி தாளினை பிறிதாக பரீட்சிக்க (அ) (உ) முனைந்து பிரித்து பரீட்சிக்க கல்வியாளர்கள் அரசுடன் முயல்வார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் களரி
ISSN - 2613 - 828X
No: 28/1, A.V. Road
Colombothurai, Jaffn
www.yarlgallery.com
yarlgallery@gmail.com

# தமிழ் அரசியலும்
## அனுரகுமார திசா நாயக்காவும்



தமழர்களுக்கு இடையே ஏற்பட்ட குரோதங்களும் ஒழுக்கமின்மையும் அரசியல் பழிவாங்களும் தமிழர்களின் அரசியல் டீவறு தளத்திற்கு இட்டுச் சென்றிருக்கின்றது.

இதுவரை தமிழ் அரசியல் வாதிகளால் தொடர்ந்து ஏமாற்றுப்பட்டுவந்த நிலையில் அவர்கள் பிறிதொரு தேடலை தேடுவது காலத்தின் கட்டாயமாகின்றது. இலங்கை தமிழ் காங்கிரஸ் தொடக்கம் அக்கட்சி உடைந்து இலங்கை தமிழரசுக் கட்சியாக பரிணாபம் பெற்றதன் பின்னால் தமிழர் அரசியல் போராட்டம் என்பது பல திசை களில் திருப்பப்பட்டு பல ஒப்பந்தங்களைக் கண்டு நீண்ட ஆயுதப் போராட்டத்தினூ டாகப் பயணித்து இன்று மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பியிருக்கின்றது. ஏதோ நேற்றைய தினம் அரசியலுக்குள் வந்ததாக ஒரு புது முகத்தைக் காட்டிக் கொண்டிருக்கின்றது. பல லட்சத்தை தாண்டிய தமிழ் அரசியல் பரப்பு மாநாட்டு அழிவுக்குப் பின்னால் ஒரு புதுத்த ளத்தை நாங்கள் எட்டியிருக்க வேண்டும். ஆனால், இன்றும் தமிழ் அரசியல் என்பது பூச்சியமாக இருப்பதாகவே தமிழர்களை நம்புகின்றது.

வரும் தேர்தலின் முடிவுக்குப் பின்னால் ஒரு சந்தியில் நின்று தடுமாறப் போகிறோமோ இல்லை வேறொருலுநிலையில் பயணிக்கப் போகிறோமா அநுரா தான் முடிவாகுமா சேக்விதான் முடிவாகுமோ...

"தடுமாறப் போகிறதா தமிழ் அரசியல்"




இப்பத்திரிகை ஜோ.ஜெஸ்ரின் என்பவரால் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, நியூ எவகிறீன் அச்சகத்தில் 10.11.2024ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org